# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் – 03.07.2025**

**முன்னிலை**

**திரு முகம்மது ஷகீல் அஃதர், இகாப (ஓய்வு)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். CP 3004/F/2022**

திரு.கே.ரங்கசாமி, — புகார்தாரர்
த/பெ.காளியண்ண கவுண்டர்,
2/184, இந்திரா நகர்,
இராசிபாளையம் (கிராமம்),
மோகனூர் வட்டம் (ம) அஞ்சல்,
நாமக்கல் மாவட்டம்-637 015.

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம் --- பொது அதிகார அமைப்பு
மோகனூர் -637 015,
நாமக்கல் மாவட்டம்.

**ஆணை**

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ், 12.08.2022 தேதியிட்ட பொதுத் தகவல் அலுவலர், தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், மோகனூர் வட்டம், நாமக்கல் மாவட்டம் அவர்களுக்கு அனுப்பிய மனுவில், 20/03/2022 தேதியிட்ட புகார் மனுவுடன் இணைக்கப்பட்டு உள்ள 3339/1950 என்ற பாகபிரிவினை ஆவணத்தில் மொத்தம் எத்தனை சொத்துக்கள், எத்தனை பாகங்களாக பிரிக்கப்பட்டு உள்ளது. அவைகளின் புல எண்கள்/ பரப்பளவு/

மொத்த புல எண்கள் / மொத்த பரப்பளவு என்று காளம் அமைத்து சான்று வழங்கவும்" என்பன போன்ற தகவல்களை 11 இனங்களில் வழங்கக்கோரியுள்ளார்.

2. அம்மனுவைப் பெற்ற பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர், மோகனூர் வட்டம், நாமக்கல் மாவட்டம் அவர்கள் மனுதாரர் கோரிய தகவல்கள் குறித்து மூ.மு.4021/2022/ஆ1, நாள் 18.08.2022 தேதியிட்ட கடிதத்தில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(3)(ii)-ன் கீழ் வட்ட சார் ஆய்வாளர்/ பொதுத் தகவல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், மோகனூர் அவர்களுக்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அதன் நகலை மனுதாரருக்கும் அனுப்பியுள்ளார். அம்மனுவைப் பெற்ற பொதுத் தகவல் அலுவலர்/ வட்ட சார் ஆய்வாளர், மோகனூர் வட்டம் அவர்கள் த.அ.உ.ச.ம.எண்.17/2022/ஆ5, நாள் 05.09.2022 தேதியிட்ட கடிதத்தில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 2(F)-ன் கீழ் பொருந்தாது என்ற தகவலை மனுதாரருக்கு வழங்கியுள்ளார். அதன் பின்னர் மனுதாரர் பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து உரிய காலத்தில் உரிய தகவல்கள் தராமல் வேண்டுமென்றே மன உளைச்சல் ஏற்படுத்துவதாகத் தெரிவித்து பொதுத் தகவல்அலுவலர் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மற்றும் இழப்பீடு வழங்கக் கோரி 15.09.2022 தேதியிட்டு பிரிவு 18 (1)-ன்கீழ் புகார் மனுவை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப் பெற்ற ஆணையம் CP 3004/F/2022 ஆக பதிவு செய்து, மேற்சொன்ன புகார் மனுவின் மீது காணொளி காட்சி விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு 03.07.2025 அன்று நடைபெறும் தமிழ்நாடு தகவல் ஆணைய காணொளி காட்சி விசாரணைக்கு ஆஜராகுமாறு மனுதாரர் மற்றும் பொதுத் தகவல் அலுவலர் ஆகியோருக்கு ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

3. இன்றைய காணொளி காட்சி விசாரணைக்கு மனுதாரர் மற்றும் அவரது உறவினர் திருமதி.லட்சுமி ஆகியோர்கள் ஆஜரானார்கள். பொது அதிகார அமைப்பின் பொதுத் தகவல் அலுவலர் திரு.நா.ஹரிதேவ், வட்ட சார் ஆய்வாளர் (நிலஅளவை), மோகனூர் அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார்.

4. இன்றைய காணொளி காட்சி விசாரணைக்கு ஆஜரான மனுதாரரின் பிரதிநிதி பொது அதிகார அமைப்பால் வழங்கப்பட்ட தகவல்கள் தவறானவை என்று தெரிவித்து, தனக்கு உரிய தகவல்களை பெற்றுத் தருமாறு ஆணையத்திடம் முறையிட்டார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

5. இன்றைய காணொளி காட்சி விசாரணைக்கு ஆஜரான வட்ட சார் ஆய்வாளர், மனுதாரர் கோரிய தகவல்கள் குறித்து ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய தகவல்கள் குறித்து த.அ.உ.ச.ம.எண்.17/2022/ஆ5, நாள் 05.09.2022 தேதியிட்டு பதில் அனுப்பப்பட்டுள்ளதாகவும் பின்னர் 24.04.2025 தேதியிட்ட

கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு இனம் வாரியாக தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அவற்றின் நகலை இணைத்து ஆணையத்தின் பார்வைக்கு சமர்ப்பித்தார். 24.04.2025 அன்று வழங்கப்பட்ட தகவல்களை 05.09.2022 அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் வழங்கியிருக்கவேண்டும்.

6. இன்றைய விசாரணையில் மனுதாரரால் எடுத்துரைக்கப்பட்ட வாதுரைகள், பொது அதிகார அமைப்பால் மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவல்கள் எடுத்துரைக்கப்பட்ட வாதுரைகள் ஆகியவற்றை ஒன்றன்பின் ஒன்றாக ஆணையத்தால் பரிசீலனை செய்யப்பட்டது. அவ்வாறான பரிசீலனையில் பொது அதிகார அமைப்பால் 05.09.2022 தேதியிட்டு மனுதாரருக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 2(F)-ன் கீழ் பொருந்தாது என்ற தகவல் வழங்கப்பட்டுள்ளதை ஆணையம் ஏற்கவில்லை. இந்நிலையில், ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பிக்கின்றது.

- **மனுதாரரின் 12.08.2022 தேதியிட்ட தகவல் கோரும் மனுவிற்கு அப்போதைய 05.09.2022 தேதிய பொதுத் தகவல் அலுவலர் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 2(F)-ன் கீழ் பொருந்தாது என்ற தவறான தகவலை வழங்கியதற்காக அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் திரு.அருண், வட்ட சார் ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், மோகனூர் அவர்கள் மீது ஏன் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20 (1) மற்றும் 20 (2)-ன்கீழ் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான விளக்கத்தினை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் மூலமாக இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்குமாறு மேற்சொன்ன அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது. தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் அவர்கள் மேற்சொன்ன பொதுத் தகவல் அலுவலரிடம் விளக்கத்தினை பெற்று 24.07.2025 அன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 3004/F/2022</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம்
மோகனூர் -637 015,
நாமக்கல் மாவட்டம்.

**(அப்போதைய) பொதுத் தகவல் அலுவலர் (05.09.2022 தேதிய)**
**திரு.அருண்,**
**வட்ட சார் ஆய்வாளர்,**
**வட்டாட்சியர் அலுவலகம்,**
**மோகனூர்.**

**<u>மனுதாரர்:-</u>**

திரு.கே.ரங்கசாமி,
த/பெ.காளியண்ண கவுண்டர்,
2/184, இந்திரா நகர்,
இராசிபாளையம் (கிராமம்),
மோகனூர் வட்டம் (ம) அஞ்சல்,
நாமக்கல் மாவட்டம்-637 015.

**<u>நகல்</u>**

மாவட்ட ஆட்சித் தலைவர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
நாமக்கல் மாவட்டம்.

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை-35.

Copy to: File NS/PA-